19.01.2026

O.S.No. 114/2022

PW1– முருகன் – த/பெ. அழகையா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 19.01.2026

1 முதல் 3 பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கீழ்க்கண்ட பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை : ( 4 முதல் 6, 8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்)

1. இந்த வழக்கு 62 செண்ட் சொத்துக்கான வழக்கு என்றால் சரிதான். பிராதுதபசில்சொத்து ஆதியில் கிருஷ்ணநாடாருக்கு பாத்தியப்பட்டது என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். கிருஷ்ணநாடாருக்கு தபசில் சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கிருஷ்ணநாடாருக்கு 4 வாரிசுகள் என்றால் சரிதான், அதற்கான வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆதியில் வழக்கு சொத்து கிருஷ்ணநாடாருக்கு பாத்தியப்பட்டது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. வா.சா.ஆ.1 ஆவணம் மோடிசயான ஆவணம் என்றால் சரியல்ல. கிருஷ்ணநாடாரின் 4 வாரிசுகளுக்கு 62 செண்ட் வீதம் பாத்தியப்பட்டது என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் கிருஷ்ணநாடாரின் வாரிசுகளுக்கு தலா 62 செண்ட் எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் உண்மைக்கு புறம்பான ஆவணம் என்றால் சரியல்ல.

இந்த ஆவணத்தில் சொல்லியவாறு பிரிவினை செய்யப்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

3. பிராது தபசில் சொத்து பாக்கியநாடாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாக்கியநாடாரின் மகன் பால்துரை என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாக்கியநாடார் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவரின் இறப்பு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. பால்துரை என்பவருக்கு வழக்கு சொத்து சம்பந்தமாக பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான், ஆனால் பத்திரம் உண்டு. 1975 லேயே எனது தந்தை பிராது தபசில் சொத்தை கிரையம் வாங்கிவிட்டார். 1975 ம் ஆண்டு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

5. வா.சா.ஆ.6 ஆவணத்தில் முருகன் என்ற முருகையா என்று தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் பிராதில் முருகன் என்ற பெயரில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முருகன் என்ற முருகையா ஒரே நபர் என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்திற்கும், எனக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தை பார்த்தபின்பாவது எனது பிராதில் முருகன் என்ற முருகையா என்பதை சீர்திருத்தம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

6. வா.சா.ஆ.7 ஆவணத்தில் வரி செலுத்தியவரின் நபர் பெயர் முருகையா என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தில் முருகன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் சொத்துவரி ரசீதில் முருகன் என்ற முருகையா என்றுதான் உள்ளது. வா.சா.ஆ.7 ஆவணத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. மேலும் வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல.

7. வழக்கு தாக்கல் செய்தபின்பு வழக்கு சொத்திற்கு வில்லங்கசான்றிதழ் பார்த்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.11 ஆவண புகாருக்கு ஒப்புதல் அட்டையோ, காவல்நிலையத்தால் வழங்கப்பட்டட CSR யோ, FIR யோ வழங்கப்பட்டதா என்றால் வழங்கப்படவில்லை. வா.சா.ஆ.11 ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8. வழக்கு தபசில் சொத்தில் பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் எனது இடம் போக மீதமுள்ள இடத்தில் காற்றாலை நிறுவனம் உள்ளது. பிரதிவாதிகள் நான் பிராதில் சொன்ன தேதியன்று என்னை இடைஞ்சல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

9. வழக்கு தபசில்சொத்து ஆதியில் திரவியநாடாருக்கு பட்டா எண்.908 ன் மூலம் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதற்குபின்பு அவரது வாரிசான கிருஷ்ணநாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

கிருஷ்ணநாடாரிடம் இருந்து ஆவணஎண்.545/2010 மூலம் 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களிடமிருந்து தற்போதுள்ள 4 முதல் 6, 8 முதல் 12 பிரதிவாதிகள் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. தபசில் சொத்து ஆதியில் திரவியநாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

10. தற்போது பிரதிவாதிகள் பிராதுதபசில் சொத்தை அடமானம் வைத்து அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. எனக்கு பிராது தபசில் சொத்தில் அனுபவம் இல்லை என்றாலும், எனக்கு உரிமையில்லாத சொத்தில் வீண் வம்பு செய்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி